# சீனாவுக்கு கடத்திய ரூ.4.70 கோடி செம்மரம் பறிமுதல்

**திருவொற்றியூர், ஜூன் 8:** சீனாவுக்கு கடத்தப்பட்ட 39 டன் செம்மரத்தை மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை பறிமுதல் செய்தனர். இதன் சர்வதேச சந்தை விலை ரூ. 4.70 கோடி ஆகும்.

இது குறித்து புலனாய்வு பிரிவின் தென்மண்டல கூடுதல் இயக்குனர் ஜெனரல் சி.ராஜன் செய்தியாளர்களிடம் கூறியது:

செம்மரம் கடத்தல் குறித்து தொடர்ந்து கண்காணித்து வந்தோம். இதில் கிடைத்த சில தகவல்களின் பேரில் கப்பலில் மலேசியா சென்று கொண்டிருந்த இரண்டு 40 அடி நீள கண்டெய்னர்களை சென்னைக்கு திரும்ப கொண்டுவர உத்தரவிட்டோம். இதனையடுத்து கொண்டுவரப்பட்ட கண்டெய்னர்களை திறந்து அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதில் 39 டன் செம்மர கட்டைகள் இருந்தது தெரிய வந்தது.

ஆவணங்களின்படி ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள ஓஸ்வால் ஹேண்டிகிராஃப்ட்ஸ் என்ற நிறுவனம் மலேசியாவில் உள்ள டேகு குரூப் என்ற நிறுவனத்திற்கு மேஜை, நாற்காலி உள்ளிட்ட மரச் சாமான்கள் எனவும், அதன் எடை 22 டன் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆந்திர மாநிலத்திலிருந்து சென்னைக்கு செம்மர கட்டைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. சென்னை துறைமுகத்தில் கண்காணிப்பு தீவிரமாக இருந்ததால் அதிகாரிகளைச் திசை திருப்பும் வகையில் ஜோத்பூர் கொண்டு சென்று அங்கு பொம்மைகள் என்ற பெயரில் கண்டெய்னரில் ஏற்றியுள்ளனர். இச்சம்பவத்தில் சென்னையைச் சேர்ந்த கும்பல் ஈடுபட்டிருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. விரைவில் அவர்கள் பிடிபடுவார்கள் என்றார் ராஜன்.



சீனாவுக்கு கடத்தப்படவிருந்த ரூ.4.70 கோடி மதிப்புள்ள செம்மரங்களை மத்திய வருவாய் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். சென்னையை அடுத்த மீஞ்சூரில் வைக்கப்பட்டுள்ள செம்மரங்கள் குறித்து செய்தியாளர்களிடம் விளக்குகிறார் இதன் கூடுதல் இயக்குனர் ஜெனரல் சி.ராஜன்.